**கவனிக்க.**- *11.10.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1833 - 2013 ඔක්තෝබර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.10.17

*1833 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1437 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1441 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1436 | நானாவித அறிவித்தல்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

**ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகைக்கு விற்றல் - 2014**

*(2014 சனவரி 01 ஆந் திகதி முதல் 2014, திசெம்பர் 31 ஆந் திகதி வரை)*

*2014, சனவரி 01 ஆந் திகதி முதல் 2014, திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படுதல் வேண்டும்.*

*3. கேள்விப்படிவங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் கள்ளுத்தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "................................... ஆம் இலக்க ................................... கள்ளுத்தவறணைக்கான கேள்வி" எனக் குறிப்பிடல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2013.11.18 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ஜா-எல பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்துக்குள் ஜா-எல பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியில் இடல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.*

*5. 2013.11.18 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரதாரர்கள் ஜா-எல பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6. குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை பெறத்தவறும் தவறணைகள் 2013.11.18 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு விற்பனையாகும். அப்போது ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களும் வர்த்தமானியின் நிபந்தனைக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.*

*7. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை ஜா-எல பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*நிமாலி த சில்வா,*
*பிரதேச செயலாளர்,*
*ஜா-எல.*

*பிரதேச செயலகம்,*
*ஜா-எல,*
*01.10.2013.*

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | கிராமம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்தி ரத்துக்கான வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 01 | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கந்தானை | 18.11.2013 மு. ப. 10.30 | 1,500 0 |

*10-416*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## திருத்தம்

27.09.2013 ஆந் திகதிய 1830 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் ''பகுதி I : தொகுதி (IIஆ)'' இல் ''உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்'' என்னும் தலைப்பின் கீழான அறிவித்தல் இலக்கம் 9-1161 இல் கம்பனியின் இலக்கம் தவறுதலாக ''பிபீ 80935'' என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் சரியான கம்பனி இலக்கம் ''பீவீ 80935'' ஆகும்.

ஹர்ஷதா ஹோல்டிங்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
என்ற கம்பனிக்காகவும் அதன் சார்பிலும்,

பி. டபிள்யு. கோர்ப்பரேட்
செக்கரட்டேரியல் (பீவீரீ) எல்ரீடீ,
செயலாளர்கள்.

10-599

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

இல. 129/9பி, ஸ்டேஸ் வீதி, கொழும்பு 14 என்னும் முகவரியைச் சேர்ந்த இராமசாமி சாந்தகுமார் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு ரீ. எம். லாபீர் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2044 ஆம் இலக்க 2004.04.19 ஆந் திகதியிடப்பட்டதுமான அற்றோணி தத்துவம் இராமசாமி சுரேஸ்குமார் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 720200902V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணி தத்துவத்தை இல்லாதொழித்து, இரத்துச்செய்துள்ளேன் என பொது மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

இராமசாமி சாந்தகுமார்.

10-461

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கிரான்ட் ஏசியா லொஜிஸ்டிக் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 75976
கூட்டிணைப்புத் திகதி : 13.12.2010
பதிவு முகவரி : ட்ரஸ்ட் கடைத் தொகுதி, இல. 10 1/3, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13

செயலாளர்/பணிப்பாளர்.

10-486/1

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : குமாரசிரி லொஜிஸ்டிக் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 71510
கூட்டிணைப்புத் திகதி : 15.03.2010
பதிவு முகவரி : இல. 235, மாகம்மன, ராகம

செயலாளர்/பணிப்பாளர்.

10-486/2

## அறிவித்தல்

கீழ் விபரிக்கப்பட்டுள்ள வியாபாரப் பெயரைக் கொண்ட கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்டு பதியப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகின்றேன் :-

1. கம்பனியின் பெயர் : விஷன் எக்ரோ (பிறைவேட்) லிமிட்டெட்
2. பதிவிலக்கம் : பீவீ 94452
3. பதிவு விலாசம் : இல. 140/2, வல்லஹகொட, கம்பளை

10-410

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஜீ. ஐ. ஆர். இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 93945
கூட்டிணைப்புத் திகதி : 2013.08.22
பதிவு முகவரி : இல. 22/10சீ, கொவிகம் பெதெச, திவுல்பிட்டிய, பொரலெஸ்கமுவ

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்சோல் வீதி,
கொழும்பு 02.

10-510

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சிவிக்ஸ் சொலுஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 79064
பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : இல. 604/ 3பி, முட்டோட்டுகொட வீதி, தலங்கம வடக்கு, பத்தரமுல்ல
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 30.05.2011

கம்பனியின் பெயர் : டென் பிளஸ் ப்ரொடக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 82694
பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : இல. 63, அரலிய உயன, தேபானம, பன்னிப்பிட்டிய
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 29.11.2011

உதேனிகா அபேசிரிவர்தன,
கம்பனி செயலாளர்.

10-480

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஜென்ரல்ஸ் மெனர் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்டுள்ள இலக்கம் : பீவீ 94716
திகதி : 2013, செத்தெம்பர் 25
பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலகம் : இல. 97ஏ, காலி வீதி, கொழும்பு 3

பணிப்பாளர்.

10-508/ 1

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : தமன ஹய்-டெச் டேரி பாம்ஸ் லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்டுள்ள இலக்கம் : பீபி 5137
திகதி : 2013, செத்தெம்பர் 25
பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலகம் : இல. 163ஏ, கமமெத்த றோட், துடெல்ல, ஜா-எல

பணிப்பாளர்.

10-508/ 2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : நாணயக்கார கன்ஸ்ட்ரக்ஷன் அன்ட் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 94429
கூட்டிணைப்புத் திகதி : 2013, செத்தெம்பர் 06
பதிவு முகவரி : இல. 279, குருக்குளாவ, நாகம

பணிப்பாளர்கள்.

10-511

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ட்ரம்ப் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 75215
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 16/ 3 1/ 1, விஜிதா வீதி, நெடிமால, தெஹிவளை

10-575

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : டபிள்யூ எஸ் ஓ டு மொபைல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 92830
கூட்டிணைப்புத் திகதி : 2013.06.05
பதிவு முகவரி : இல. 59, புளவர் வீதி, கொழும்பு 7

சபையின் அனுமதிப்படி,

பீ. ஆர். செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

10-543

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : நுரைச்சோலை விண்ட் பவர் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 68463
முகவரி : இல. 11, கபுண்கொட, பமுணுகம

பணிப்பாளர் சபையின் பணிப்புரையின் பேரில்.

10-545

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, அதன் மக்கள் மற்றும் அனைவருக்கும் அறியத்தருவதாவது,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, மிரிஹான, நுகேகொடை, அத்துகோரள பிளேஸ், இல. 72/79 ஐச் சேர்ந்த சுமித் நிசாந்த அத்துகோரள (தேசிய அடையாள அட்டை இலக்கம் : 681210938V) என்பவருக்கு அவகட்அலா கூர் 14, 75005, பாரிஸ் எனும் முகவரியைச் சேர்ந்த தாரிக் அபாரி என்பவரால் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம், பணப் பரிமாற்றம் உரிய முறையில் பூர்த்திசெய்யப் பட்டுள்ளதால் மீளப்பெறப்பட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதை நாங்கள் சகலருக்கும் இத்தால் அறியத்தருகிறோம். மேற்கூறப்பட்ட இவ் அற்றோணித் தத்துவத்தின் மூலம் இதன் பின்னர் எங்கள் சார்பில் சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவக்காரரால் புரியப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கோ அல்லது பணப் பரிமாற்றத்திற்கோ நாங்கள் பொறுப்பல்ல என்பதனையும் கூறிக்கொள்கிறோம்.

ஸிரோமி தேவேந்திரன்,
தேவன்ஜா நாலக தேவேந்திரன்.

10-530

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

தல்பை, மிஹிரிபென்ன, காலவத்தை, இலக்கம் 654 இல் வசிக்கும் யோக் மெதியஸ் ஸ்பார்க் ஆகிய நான், காலி மாவட்டத்தில் பிரசித்த நொத்தாரிசு சரத் சுனில் மனம்பேரி அவர்களால் 1990.07.10 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 1370 ஐக் குறிக்கும் அற்றோணி அதிகாரத் தத்துவப்பத்திரம் மூலம் எனது அற்றோணி அதிகார தத்துவகாரராக தல்பை, “சிரியாணி” இல் வசிக்கும் பிந்து விக்கிரமசேகர என்பவரை நியமித்ததை 2013, ஒற்றோபர் மாதம் 8 ஆந் திகதியிலிருந்து மேற்படி அற்றோணி அதிகாரத்தை சட்டப்படி இரத்துச் செய்துள்ளேன் என்பதை இதன் மூலம் எல்லோருக்கும் அறியத்தருகிறேன்.

யோக் மெதியஸ் ஸ்பார்க்.

10-670

## அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

### சிலோன் ரீ ஹாடன்ஸ் லிமிட்டெட்

கம்பனியின் பதிவு இல. பீபி 1426

இத்தால் சகலரும் அறிவது யாதெனில், 2013 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 24 ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319(1)(பி) ஆம் பிரிவின் கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் மூலம் 2013, புரட்டாதி மாதம் 24 ஆந் திகதி முதல் கலைப்பதற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

டி. ஜே. அம்பானி,
எல். ஜே. அம்பானி,
பணிப்பாளர்கள்.

2013, ஐப்பசி 02.

10-529/1

## அறிவித்தல்

### சிலோன் ரீ ஹாடன்ஸ் லிமிட்டெட்

கம்பனியின் பதிவு இல. பீபி 1426

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 346(1) இன் கீழான இணை கலைப்பாளர் நியமனம் பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கொழும்பு 4, காசல் வீதி, இல. 2, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட் ஆகிய நாம், இல. 153, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 5 இல் அமைந்துள்ள சிலோன் ரீ ஹாடன்ஸ் லிமிட்டெட் கம்பனியின் 2013, புரட்டாசி 24 ஆந் திகதி நடைபெற்ற அதிவிசேட பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்படி கம்பனியின் இணை கலைப்பாளர்களாக நியமிக்கப்பட் டுள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம,
ஜீ. ஜே. டேவிட்,
இணை கலைப்பாளர்கள்,
சிலோன் ரீ ஹாடன்ஸ் லிமிட்டெட்.

மே./பா., எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரீஸ்ரக்ஷர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 04,
02.10.2013.

10-529/2

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : லங்கா மாஸ் பப்ளிசர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 82962
*கூட்டிணைப்புத் திகதி* : 2011.12.09
*பதிவு முகவரி* : இல. 156 C, மாதிவெல வீதி, நுகேகொடை

கலம்போ கோப்பரேட் சேவிசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

10-487

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ்கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர்* : மெதாயா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பிவி 90724
*கூட்டிணைப்புத் திகதி* : 29.01.2013
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி* : தாஸ்விலா, முல்லப்பிட்டிய, பேருவளை

கலம்போ கோப்பரேட் சேவிசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

10-488

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டீ. ஜீ. லெசர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 93852
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.07.31
*பதிவு முகவரி* : இல. 155/1A , கொழும்பு வீதி, ஜா-எல

செயலாளர்.

10-490

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்*: கெனட் எட்வடைசிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 93851
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.07.31
*பதிவு முகவரி* : இல. 99/1, சனஸ கட்டடத் தொகுதி, வெயங்கொட வீதி, மினுவங்கொட

செயலாளர்.

10-491

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது. :-

*கம்பனியின் பெயர்* : சிமோனஸ் டிரஸ்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 94416
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 40, கோல்பேஸ் கோட் -2, கொழும்பு 03.

செக்கிரிடேரியர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
பீவீ 5958

10 - 433/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கீழ்வரும் கம்பனி /கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது. :-

*கம்பனியின் பெயர்* : சா மரா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 94578
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 161, நாவல வீதி, நாரஹேன்பிட்டிய, கொழும்பு 05.

செக்கிரிடேரியர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
பீவீ 5958

10 - 433/2

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் கீழ் கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்*

*கம்பனியின் முன்னைய பெயர்* : விஷன் புரோபேட்டி (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவிலக்கம்* : பீவீ 65582

*பதிவு முகவரி* : இல. 35, கோல்பேஸ் கோட் -2, கொழும்பு 03.

கம்பனியின் புதிய பெயர்: ஏசியா டீக் லங்கா (பிரைவேட்) லிமிடெட்

செக்கிரிடேரியர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
பீவீ 5958

10 - 433/3

---

# ஏல விற்பனைகள்

## நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆவது பிரிவின்கீழான ஏல விற்பனை அறிவித்தல்*

**காணிகள் ஏல விற்பனை**

**மேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் மதுரங்குளி கிராமத்தில் மாதகும்புக்கடுவல வீதியில் அமைந்துள்ள காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஓ. எம். நஜீப் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 08.04.2010 ஆந் திகதியிடப்பட்ட 2511 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 1 எனக் குறித்துக்காட்டப்பட்ட காணியின் அனைத்தும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டும் அதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் அனைத்தும்**

**(பரப்பளவு : (2ஏ. 0று. 0பே.)**

இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 இல் நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இடம் பெற்ற நிதி வசதிகளின் மீளக் கொடுப்பனவுக்கான பிணையாக வங்கிக்கு சுமித் கோயர் பைபர் இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் ஈடுவைக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட மேலே விபரிக்கப்பட்ட உரிமைகள், ஆதனம் மற்றும் நிலையங்கள் சம்பந்தமாக பிரசித்த நொத்தாரிசு என். எஸ். கலன்சூரியவால் உறுதிப்படுத்தப்பட்ட 2010, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதியிடப்பட்ட 1263 ஆம் இலக்க ஈட்டுமுறி கூறப்பட்ட சுமித் கோயர் பைபர் இன்ரஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் மீள் கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறிவிட்டதால், கூறப்பட்ட நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீயினால் வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு ஏற்ப மேற்குறிப்பிட்ட ஆதனத்தை 2013, நவெம்பர் 15 ஆந் திகதி ந. ப. 12.00 மணிக்கு அதே இடத்தில் நாம் விற்பனை செய்யவுள்ளோம்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- கொள்வனவு முயற்சியில் வெற்றி பெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத் தொகையினை ஏலவிற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90% வீதமும் நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2 1/2%) ;
(4) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(5) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் ;
(6) எழுதுவினைஞர், முரசறைவோர் கூலியாக ரூபா 1,000 ;
(7) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசு கட்டணம் உட்பட ஏனைய கட்டணங்கள் ரூபா 2,000.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்கள் கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும்.- ''சட்டத் திணைக்களம், நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 46/58, நவம் மாவத்தை, கொழும்பு 02, தொலைபேசி இல. : 011-4218746''.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்.

இல. 182, 3 ஆவது மாடி, ஹல்ஸ்றொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-2388318

10-591

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – நுகேகொடை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுதல் 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இதன்கீழ் விபரிக்கப்பட்ட காணி என்னால் அதே இடத்தில் 2013, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

**காணிகள் ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து, சல்பிட்டி கோரளையில் மஹரகம நகர சபை எல்லையில் உடாமுல்ல வெட்டகெய்யாவல றோட்டில் அமைந்துள்ள கொரக்ககாகும்புர அல்லது வெட்டகெய்யாகாகும்புர காணிக்கு நிலஅளவையாளர் டி. டபிள்யூ. அபேசிங்க 1990.09.15 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 3727 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2 என்ற காணியை மீண்டும் அளந்து நிலஅளவையாளர் எம். ஜே. ஜயரத்ன 30.10.2004 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 5020 இல் காண்பிக்கப்பட்ட லொட் 02. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0று. 18.85பே.; ஹெக்டெயர் 0.0477) மேற்படி காணியை கடன் எடுத்த ஜோர்ஜ் கபில நந்தன லியனபத்திரன மற்றும் நாணாயக்கார புள்ளே எந்தல ஆராச்சிகே லக்மினி டயஸ் குணவர்தன மற்றும் காணியை ஈடுவைத்த ஜோர்ஜ் கபில நந்தன லியனபத்திரன என்பவர்கள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்.**

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2013.07.05 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2013.10.17 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2013.10.21 ஆந் திகதியுடைய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆஸ்பத்திரி சந்தியில் இருந்து பன்சல றோட்டின் ஊடாகச் சென்று இடது பக்கம் திரும்பி 20 அடி கப்குக்காபொக்குன றோட்டில் 1/4 மைல் தூரம் சென்று இடதுபக்கம் திரும்பி வெட்டகெயிவல றோட்டில் 30 யார்கள் தூரம் சென்று காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது நுகேகொடை கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- ''முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 100, ஸ்டாலின் திலக்கரட்ன மாவத்தை, நுகேகொடை'' என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. : 011-2810942-3 ; தொலைநகல் இல. : 011-2827772.

எல். பி. சேனநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. : 011-2445393.

10-602

---

## மக்கள் வங்கி - கண்டி கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து ஏல விற்பனை

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், யட்டிநுவர கங்கபலாத்தே தெஹிகமயில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளரான பி. சீ. பர்னாந்து புள்ளே அவர்களால் 1997.08.07 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1327 ஆம் இலக்கங்கொண்ட மூலவரைவு படத்தின் 2 ஆம் லொட் இலக்கம் என அடையாளமிடப்பட்டுள்ள ஒரு றூட் முப்பத்துமூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1று. 33.5பே.) விசாலமுள்ள கட்டுகன்தெனிய மற்றும் பணகேதென்ன ஹேன என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து ஒதுக்கப்பட்ட காணி மற்றும் அங்கே அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், இலைகள், பழங்கள் ஆகிய சகலவைகளுடன் மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 7 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பிரசித்த ஏலத்தில் காணி அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- அரசாங்க வர்த்தமானியிலும், 2008.02.22 ஆந் திகதிய ''டெயிலி நியூஸ்'' பத்திரிகையிலும், 2008.02.13 ஆந் திகதிய ''தினமின'', ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் 2009.10.16 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஏல விற்பனை தீர்மான அறிவித்தலுக்கு கவனம் செலுத்தவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.**- கண்டி-கொழும்பு வீதியில் பேராதனை நகரத்தைத் தாண்டிய உடன் பொல்கஹமுல சந்தி வரை வந்தவுடன் அப்பாதையில் வலது பக்கத்தில் இருக்கும் முருதலாவ பாதையில் முருதலாவ கடை வீதி வரை சென்றவுடன், இடதுபக்கத்தில் இருக்கும் பிலிமத்தலாவ பக்கத்துக்குச் செல்லும் பாதையில் 1 கிலோ மீற்றர் அளவில் சென்ற உடன் தெஹிகம என்றழைக்கப்படும் கிராமத்தின் இறுதியில் சந்திக்கும் பாலத்திற்கு அருகில் வலது பக்கத்தில் காணி அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏல விற்பனையின் இறுதியின் போது சிறந்த கொள்வனவாளர் மூலம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பணம் செலுத்தப்பட வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) மாகாண அதிகார சபையின் குத்தகைக்காக மாகாண அதிகார சபைக்கு 1% ;
(3) ஏலதாரரின் கமிஷன் கட்டணமாக விற்பனை விலையின் ரூபா 2.5% ;
(4) இலிகிதர் மற்றும் அறிவிப்பாளர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை விலை மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அப்பணத் தொகையும்.

கொள்வனவு விலையின் மிகுதியான 90% மான பணத்தை விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் ''மக்கள் வங்கி, கண்டி பிரதேச பிரதான அலுவலகம்'' இற்குச் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 081-2234283 ; தொலைநகல் இலக்கம் : 081-2223017.

உரிமை ஒப்பனைகள் மற்றும் ஏனைய அதற்கான விபரங்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டாலும் தற்போதைக்குச் செலுத்தப்பட்டிருக்கும் கொள்வனவு விலையில் 10% க்கான தொகைப் பணத்தை மீண்டும் செலுத்தாமல் விடுவதற்கும் மீண்டும் காணியை விற்பனை செய்யும் உரிமையும் மக்கள் வங்கிக்கு உண்டு.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
அரசாங்க அனுமதிபெற்ற
ஐஎஸ்ஓ 9001 : 2000ஆம் சான்றிதழைப்
பெற்ற இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட
முன்னணியில் திகழும் ஏலதாரர்களும் மற்றும்
மதிப்பீட்டாளர்களும் காணித் தரகர்களும்.

| | |
|---|---|
| பிரதான அலுவலகம் மற்றும் காட்சி அறை : | புதிய நகர அலுவலகம் மற்றும் காட்சி அறை : |
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் பாதை, கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2224371, 081-2227593 | தொலைபேசி : 011-2585408, 011-2502680 |
| ஃபக்ஸ் இல. : 081-2224371 | ஃபக்ஸ் இல. : 011-2588176 |
| | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

10-609

---

### சம்பத் வங்கி பீ எல் சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

### சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை

ரீ. ஜீ. கே. சுமித்ரஆரச்சி மற்றும் எம். எம். எல். பெரேரா- கணக்கு இல.0061 5000 0260

2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2012.02.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2012.06.22 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2012.06.08 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' தினசரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, அறுபத்தேழு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து ஐநூற்றறுபத்தைந்து ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 67,33,565.25) 2011, ஒகத்து மாதம் 24 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை முப்பத்திரண்டு இலட்சத்து அறுபத்துநான்காயிரத்து நானூற்றுப்பத்து ரூபா பதினாறு சதம் (ரூ. 32,64,410.16) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதம் (14%) மேலும் ஒரு கட்டணமான முப்பது இலட்சத்து பதினான்காயிரத்து நாற்பத்தாறு ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 30,14,046.49) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தொரு வீதம் (21%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவர் மூலமாக 2013.11.14 ஆந் திகதி மு.ப.10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத்தருகின்றோம்.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளேயின், பலலேபத்துவின், கடுவலை பிரதேச சபை எல்லைகளுக்குள் பத்தரமுல்லை கிராமத்தில் அமைந்த தமமோதய மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 25/7, 25/7A மற்றும் 25/7B, (ஒரு பகுதி) ஐ ஏற்ற ''மதட்டியகாஹாவத்த எனும் பிலிபானதுடுகனத்தவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. டி. எஸ். குணத்திலக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, யூலை 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 3126 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன வடக்கிற்கு : இங்கமைந்த லொட் 3; கிழக்கிற்கு : அதே காணியின் லொட் A3; தெற்கிற்கு : வீதி மற்றும் மேற்கிற்கு : லொட் 1 ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்நான்கு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0று. 14.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 3126 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகமை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 1466/247 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்டதன் ஊடாகவும், அதன் மீதும் பிரவேசிக்கும் மற்றும் மார்க்க உரிமைகளுடனானது :-

அங்கு இல. 3126 ஐ ஏற்ற கூறப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 3 (2 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்).

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். பீ. டி. சில்வா என்பவர்களினால் தயாரிக்கப்பட்ட இல. 9567 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் E (8 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-610/1

---

### சம்பத் வங்கி பீ எல் சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

### சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை

பீ. வீ. ரீ. எம். பெரேரா மற்றும் எச். பி. ஏ. டீ. பெரேரா- கணக்கு இல.0061 5000 4088

2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க

வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2012.08.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2013.01.18 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2013.01.07 ஆந் திகதிய ''திவயின'', ''ஜலண்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, குறிப்பிடப்பட்ட தொண்ணூற்றாறு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நானூற்றுமுப்பது ரூபா ஐம்பத்துநான்கு சதம் (ரூ. 96,56,430.54) 2012, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை அறுபத்துநான்கு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து முப்பத்தெட்டு சதம் (ரூ. 64,76,038) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதிநான்கு வீதம் (14%) மேலும் ஒரு கட்டணமான இருபத்தேழு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து முந்நூற்றுநாற்பத்தாறு ரூபா (ரூ. 27,33,346) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) வட்டி விகிதத்திற்கு அமைவான வருமதியாகவுள்ள வட்டி மற்றும் தொடர் வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2013.11.08 ஆந் திகதி மு.ப.10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளேயின், பல்லேபத்துவின், கெஸ்பேவை பிரதேச சபை எல்லைகளுக்குள், பொரலஸ்கமுவை கிராமத்தில் மஹாரகமை வீதியில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 123/12 ஐ ஏற்ற ''கோன்காஹாவத்த எனும் சம்புத்திகோன்காஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். என். பெர்ணான்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, மாச்சு 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 3367 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : ஜீ. சந்ரசேன பெரேரா மற்றும் ஏனையோருக்கு சொந்தமான கொலைன்கும்புர; கிழக்கு : ஹேவா கமகே தியோனிஸ் என்பவரின் சொத்து; தெற்கிற்கு : சந்தனீ கந்தகே FG3, 30 அடிகள் திரும்பும் சுற்றுவட்டம் மற்றும் 20 அடிகள் அகல வீதி (ஜீ. சீ. எம். கருணாரத்ன திருமணத்திற்கு முன் பெரேரா என்பவரின் லொட் FG 10 மற்றும் FG 2 மற்றும் ; மேற்கிற்கு : பீ. கே. பெரேரா மற்றும் ஏனையோரின் சொத்து, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினெட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18பே.) கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதற்கண் அமைந்த அனைத்துமுடன். கூறப்பட்ட இல. 3367 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

இல. 3367 எனும் வரைபடத்தின் குறிப்பிடப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளேயின், பல்லேபத்துவின், கெஸ்பேவை பிரதேச சபை எல்லைகளுக்குள், பொரலஸ்கமுவை கிராமத்தில் மஹரகமை வீதியில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 123/12 ஐ ஏற்ற ''கோன்காஹாவத்த எனும் சம்புத்திகோன்காஹாவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எல். நாணயக்கார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1986, யூன் 08 (1986.06.18 என பதிவு செய்யப்பட்ட) ஆந் திகதியிடப்பட்ட இல. 4108 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் FG1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : ஜீ. சந்ரசேன பெரேரா மற்றும் ஏனையோருக்கு சொந்தமான கொலைன்கும்புர; கிழக்கு : வரிமதிப்பீட்டு இல 15/7 ஐ ஏற்ற தல்காஹாவத்த வீதி ; தெற்கிற்கு : லொட்கள் FG2, FG3 மற்றும் FG10 மற்றும் ; மேற்கிற்கு : பீ. கே. பெரேரா மற்றும் ஏனையோரின் சொத்து, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினெட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18பே.) கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன். கூறப்பட்ட இல. 4108 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 2425/276 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்ட வழி ஊடாகவும் அதன் மீது பிரவேசிக்கும் மார்க்க உரிமைகளுடனானது:-

லொட் FG 10 மேற்கூறப்பட்ட இல. 4108 எனும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுடன் தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 2425/199 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

குரூப் கம்பனிச் செயலாளர்.

10-610/2

---

**சம்பத் வங்கி பீ எல் சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

ஹர்ஷனி ஹாட்வெயார் - கணக்கு இல.0071 1000 0280

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2009.05.14 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.10.16 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2009.10.07 ஆந் திகதிய ''திவயின'', ''ஜலண்ட்'', ''தினக்குரல்'' தினசரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, ஆறு இலட்சத்து முப்பத்துநான்காயிரத்து எழுபத்தைந்து ரூபா தொண்ணூற்றொன்பது சதம் (ரூ. 6,34,075.99) 2009, சனவரி மாதம் 31 ஆந் திகதி முதல் இல. 22793 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை ஐந்து இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து அறுநூற்றுப்பதினாறு ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ. 5,69,616.28) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக

2013.11.12 ஆந் திகதி மு.ப.11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத்தருகின்றோம்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரலேயின், அதிகாரி பத்துவையின் போப்பெகமையில் அமைந்த ''காஹாட்ட காஹாலந்தவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சீ. எல். ஜீ. அத்துகோரலே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, மாச்சு 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 2406 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு 10ஏ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : எச். டபிள்யு. பீட்ட சிஞ்ஞோ மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான ஹெரகாஹாலந்த, பிட்ட எல மற்றும் டீ. டீ. அதிக்காரி மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான கொரக்ககாஹா கும்புர ; கிழக்கிற்கு : பிட்ட எல மற்றும் டீ. டீ. அதிகாரி மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான கொரக்ககாஹாகும்புர ; தெற்கிற்கு : லொட் ஜீ மற்றும் பிரதான வீதி ; மற்றும் மேற்கிற்கு : பிரதான வீதி மற்றும் எச். டபிள்யூ. பீட்ட சிஞ்ஞோ மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான ஹொரகாஹாலந்த. இவ்வெல்லை களுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் மற்றும் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 3பே.) அல்லது 0.20992 ஹெக்டெயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடனானது.

கூறப்பட்ட காணித்துண்டு கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :-

மேற்கூறப்பட்ட போப்பெகமையில் அமைந்த காஹாட்டகாஹாவத்த மிகவும் திருத்தமாக காஹாட்டகாஹாலந்தவத்த என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சீ. எல். ஜீ. அத்துகோரலே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, மாச்சு மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 972 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 10 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : டீ. டீ. அதிகாரி மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான கொரக்ககாஹா கும்புர ; கிழக்கிற்கு : லொட் பீ ; தெற்கிற்கு : நெடுஞ்சாலைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான வீதி ; மற்றும் மேற்கிற்கு : எச். டபிள்யு. பீட்ட சிஞ்ஞோ மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான ஹொரகாஹா லந்த. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் மற்றும் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 3பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் கூறப்பட்ட இல. 972 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் எப் 272/226 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

குரூப் கம்பனிச் செயலாளர்.

10-610/3